## இனி ஞாயிறுகளிலும்

# காலை 6 முதல் மெட்ரோ சேவை

**சென்னை**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் இனி அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் மெட்ரோ ரயில் சேவை காலை 6 மணிக்கே தொடங்கி இரவு 11 மணி வரையில் இருக்கும். இந்த புதிய முறை இன்று (10ம் தேதி) முதல் அமலாகிறது.

2 வழித்தடங்களிலும் 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். ஏற்கெனவே, அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் முதல் மெட்ரோ ரயில் சேவை காலை 8 மணிக்கு தொடங்கியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.